[திரு. துரைமுருகன்] [2023 ஏப்ரல் 1

அடுத்து என்ன செய்வது, நில எடுப்புக்குப் பிறகு கால்வாய் வெட்ட வேண்டும். 2020–2021 ஆம் ஆண்டில் அதற்காக நீங்கள் ஒன்றும் செலவு செய்யவில்லை. எவ்வித கால்வாய் வெட்டும் பணிகளும் உங்களுடைய ஆட்சியில் நடக்கவில்லை. 2021–2022 மற்றும் 2022–2023 ஆம் ஆண்டுகளில் 177.9 கோடி ரூபாய் நாங்கள் கால்வாய் வெட்டும் பணிக்காகச் செலவு செய்திருக்கிறோம். இந்த இரண்டு ஆண்டுகளில் 64 சதவிகிதக் கால்வாய் வெட்டும் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. 2023–2024 ஆம் ஆண்டில் கால்வாய் வெட்டும் பணிக்காக 111.52 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கால்வாய் வெட்டும் பணிகள் வேகமாக நடந்துகொண்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், நிச்சயமாக தளபதியுடைய ஆட்சியில், காவிரி–குண்டாறு இணைப்பு நடைபெற்றே தீரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. தகவல் கோரல்

சுங்கக் கட்டண உயர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2023–2024 ஆம் ஆண்டிற்கான மானிய (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களாலும் எதிர்க்கக்கூடிய ஒரு மோசமான செயல் இந்தச் சுங்கக் கட்டணக் கொள்ளை. இராப்பகல் கொள்ளையாக 6 மாதங்களுக்கு ஒருமுறை 10–லிருந்து 30 சதவிகிதம் வரை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். நீங்கள் பதிவு செய்து விட்டீர்கள். (குறுக்கீடு) மத்திய அரசு (குறுக்கீடு)

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 மாதங்களுக்கொருமுறை 10 முதல் 30 சதவிகிதம் வரை கட்டண உயர்வை அறிவித்து, உங்களில், தொடங்கி நான் வரை அனைவரிடத்திலுமே தொடர்ச்சியாக இந்தக் கட்டண வசூலில் ஈடுபடுகிறார்கள். ஆதலால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சுங்கக் கட்டணங்களை குறைப்பது குறித்து. . .

2023 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுகுறித்து மாமன்ற உறுப்பினர்கள் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் உட்பட பலர் விதி 55-ன்கீழ் தந்திருக்கிறார்கள். இன்றைக்கு இதே* demand *தான். நீங்கள் சொல்லி விட்டீர்கள். எல்லோருக்கும் இதே பதில்தான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். 2023–2024 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும் (குறுக்கீடு) இல்லை, இதுகுறித்து நாளை எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டேன்.*

முற்பகல் 11–30

4. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

(ஆ) கோரிக்கை எண் 39 – கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)

(இ) கோரிக்கை எண் 31 – தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை

(அ) கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், நான் ஏற்கெனவே பதிவு செய்துவிட்டேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திரு. கே.பி. அன்பழகன்:

தொகுதிக் கோரிக்கைகள்:

மாட்லாம்பட்டி முதல் முருக்கம்பட்டி வரையிலுள்ள 11 கி.மீ. நீளமுள்ள ODR தார்ச் சாலை 3.75 மீட்டர் அகலம் கொண்டதாக உள்ளது. இச்சாலையை 5.5 மீட்டர் சாலையாக அகலப்படுத்த வேண்டும். புலிக்கரை முதல் முக்குளம் வரையிலுள்ள சுமார் 16 கி.மீ. நீளமுள்ள ODR தார்ச் சாலை 3.75 மீட்டர் அகலம் கொண்டதாக உள்ளது. இச்சாலையை 5.5 மீட்டர் சாலையாக அகலப்படுத்த வேண்டும். கடமடை முதல் பேகாரஅள்ளி வரையிலுள்ள 6 கி.மீ. நீளமுள்ள ODR தார்ச் சாலை 3.75 மீட்டர் அகலம் கொண்டதாக உள்ளது. இச்சாலையை 5.5 மீட்டர் சாலையாக அகலப்படுத்த வேண்டும். பாலக்கோடு முதல் கேசர்குளி அணை வரை சுமார் 16 கி.மீ. நீளமுள்ள ODR தார்ச் சாலை 5.5 மீட்டர் அகலம் கொண்டதாக உள்ளது. இச்சாலையை 7 மீட்டர் சாலையாக அகலப்படுத்த வேண்டும். மொரப்பூர் முதல் மாரண்டஅள்ளி வரை 45 கி.மீ. நீளமுள்ள MDR தார்ச் சாலை 7 மீட்டர் அகலம் கொண்டதாக உள்ளது. இச்சாலையை 12 மீட்டர் சாலையாக அகலப்படுத்த வேண்டும்.

அதியமான்கோட்டை-ஒசூர் சாலையில் மாநில சாலைகளுக்குட்பட்ட சாலைகள் தற்போது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. பழுதடைந்துள்ள இச்சாலைப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட சாலைகள் அனைத்தையும் அகலப்படுத்த வேண்டும்.

பஞ்சப்பள்ளியிலிருந்து காடுசெட்டிபட்டி வரை செல்லும் தார்ச் சாலையில், பஞ்சப்பள்ளி அருகிலுள்ள சிறுபாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றி அமைக்க வேண்டும். பிக்கனஅள்ளி முதல் குண்டாங்காடு வழியாக கொத்தளம் வரை செல்லும் தார்ச் சாலையில், பிக்கனஅள்ளி அருகேயுள்ள பழைய தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றி அமைக்க வேண்டும்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

சுங்கக் கட்டண உயர்வு—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

[2023 ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுங்கக் கட்டண உயர்வு குறித்து ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் பல்வேறு மனுக்களை என்னிடத்திலும் கொடுத்திருக்கிறார்கள்; சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களிடத்திலும் கொடுத்திருக்கிறார்கள். இதுகுறித்து நான் ஒரு சிறிய விளக்கத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 6,805 கிலோ மீட்டர்; அதில், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்படும் சாலைகளின் நீளம் 5,128 கிலோ மீட்டர்; மாநில நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படும் சாலைகளின் நீளம் 1,677 கிலோ மீட்டர் ஆகும். இதில், BOT என்கிற கட்டுமானம், இயக்கம், ஒப்படைத்தல் என்பதிலுள்ள 25 சுங்கச் சாவடிகளும், TOT சுங்க வசூல் செய்வதில் 4 சுங்கச் சாவடிகளும், special purpose vehicle என்கிற மணலி சாலை மேம்பாட்டுச் சிறப்புத் திட்டத்தின்கீழ் ஒன்றும், public funded project மூலமாக 26 எனவும் தமிழ்நாட்டில் 58 சுங்கச் சாவடிகளில் சுங்கக் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. இந்த 58 சுங்கச் சாவடிகளில், 37 சுங்கச் சாவடிகளில் ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி, அதாவது இன்றைய தேதியிலிருந்தும், 27 சுங்கச் சாவடிகளில் செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதியிலிருந்தும் இந்தக் கட்டணத்தை வசூல் செய்ய வேண்டும் என்று ஒன்றிய அரசாங்கம் முடிவு செய்து, ஆணை பிறப்பிக்கப்பட்டதையடுத்து, இந்த வசூலைத் தொடங்கியிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-05

காலையில் அதனை நான்கூட தொலைக்காட்சியில் பார்த்தேன். ஆங்காங்கு தொழிற்சங்கத் தலைவர்களெல்லாம் ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதில் ஒன்றிய அரசாங்கம் என்ன சொல்கிறது என்று சொன்னால், நாங்கள் ஏற்கெனவே போட்டிருக்கிற சட்டத்தின் அடிப்படையில்தான் இவையெல்லாம் போடப்படுகின்றன என்று சொல்கிறது. BOT, TOT என்ற அடிப்படையில் 32 சுங்கசாவடிகளைப் பொறுத்தவரை, அரசு மற்றும் தனியார் பங்களிப்பின் வாயிலாக முதலீடு செய்யப்பட்டு, அதற்கான சுங்கக் கட்டணம் குறிப்பிட்ட கால நிர்ணயத்தில், இந்தச் சாலைகள் 6 அல்லது 4 வழித் தடங்களாக இருப்பதால், இவற்றில் உள்ள சுங்கச் சாவடிகளை அகற்ற நடவடிக்கை எடுக்கும் நிலையில் ஒப்பந்ததாரருக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை நாங்கள்

2023 ஏப்ரல் 1] [திரு. எ.வ. வேலு]

தர வேண்டியதாக இருக்கிறது; ஆகையால் அவற்றை வசூல் செய்துதான் கொடுக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில்தான் நாங்கள் வசூல் செய்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையையேற்று, கடைசியாக 18–3–2023 அன்று ஒரு கடிதம் எழுதினேன். ஏற்கெனவே, ஒன்றிய அரசின் மாண்புமிகு அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்களைப் பார்க்கின்றபோதெல்லாம், தொடர்ந்து தமிழ்நாட்டில் இருக்கிற சுங்கக் கட்டணத்தை நிறுத்த வேண்டும்; ஏற்கெனவே இந்தச் சாலைகள் அமைக்கப்பட்டதற்கெல்லாம் முழுமையாகச் செலவினங்கள் தீர்ந்துவிட்டன. இன்னும் வசூல் செய்வது நியாயமில்லை என்ற அடிப்படையில், 5 சுங்கச்சாவடிகள் அடையாளம் காட்டப்பட்டு, அவற்றையும் அகற்றுவதற்கு கடிதம் மூலமாகவும் நேரடியாகவும் எடுத்துச்சொன்னோம்.

அந்த அடிப்படையில், கடைசியாக எழுதிய கடிதத்தில்கூட கடினப் புருவங்களுடன்கூடிய இரு வழித்தடச் சாலைகளை அமைக்க 14 சுங்கச் சாவடிகள், சுங்கக் கட்டணம் வசூலிப்பதை நிறுத்த வேண்டும்; பொதுவாக மாநில அரசாங்கத்தினுடைய சாலைகளை, உதாரணமாக 10 மீட்டர் சாலை போடுகிறோம் என்று சொன்னால், இந்தப் பக்கம் ஒன்றரை மீட்டர், அந்தப் பக்கம் ஒன்றரை மீட்டர் மட்டும் ஒன்றிய அரசாங்கம் போட்டுவிட்டு, அந்தச் சாலையில் சுங்கக் கட்டணத்தை வசூல் செய்கிறது. அதேபோல் ஏழு, ஏழரை மீட்டர் சாலை இருக்கிற இடத்திலும்கூட இந்தப் பக்கம் ஒன்றரை மீட்டர், அந்தப் பக்கம் ஒன்றரை மீட்டர் மட்டும் போட்டுவிட்டு, அதிலேயும் சுங்கக் கட்டணம் வசூலிக்கிறார்கள். ஆகையால் இதுபோல் மாநில அரசாங்கத்திடம் கையகப்படுத்தி, 3 மீட்டர் மட்டும் போட்டுவிட்டு, அதிலே சுங்கக் கட்டணம் வசூல் செய்வது நியாயமில்லை என்ற அடிப்படையில், ஏறத்தாழ 14 சுங்கச்சாவடிகளில் இப்படி தமிழ்நாட்டில் வசூல் செய்யப்படுகிறது, அதையெல்லாம் நீங்கள் நிறுத்த வேண்டும் என்று கடிதம் மூலமாக நாங்கள் தெரிவித்தோம்.

அதோடு மட்டுமல்ல, நகராட்சி எல்லைக்குட்பட்டிருக்கிற 10 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பவற்றையெல்லாம் எடுக்க வேண்டும் என்று ஏற்கெனவே ஒன்றிய அரசாங்கத்தின் விதி இருக்கிறது. அந்த விதியைக் காட்டி, 5 இடங்களில் உள்ள சுங்கச் சாவடிகள் அகற்றப்பட வேண்டும் என்று அதற்கும் கடிதம் கொடுத்தோம். அதோடு மட்டுமல்ல, மூலதனங்களெல்லாம் செலவு செய்யப்பட்ட சாலைகள், பரனூர்–ஆத்தூர் சாலை, அதேபோன்று கிருஷ்ணகிரியில்

[திரு. எ.வ. வேலு] [2023 ஏப்ரல் 1

இருக்கிற தப்பலூர் சாலை-இவற்றில் கட்டுமானப் பணிகளுக்கு தொகை செலவிடப்பட்டு, மீண்டும் வசூல் செய்யப்பட்டுவிட்டது. எனவே, இவற்றுக்கெல்லாம் நாங்கள் இனிமேல் 40 சதவிகிதம்தான் வசூல் செய்வோம் என்று ஒன்றிய அரசாங்கத்தினுடைய மாண்புமிகு அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்கள் நாடாளுமன்றத்தில் பதில் சொன்னார்கள். நீங்கள் 40 சதவிகிதம் வசூல் செய்யுங்கள் என்பதையும் குறிப்பிட்டு, அதேநேரத்தில் கிருஷ்ணகிரி போன்ற இடங்களில் பார்த்தோமென்றால், அங்கு நகரத்திற்குள்ளேயே மருத்துவக் கல்லூரியுடன்கூடிய மருத்துவமனை இருக்கிறது; மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இருக்கிறது; அதன் காரணமாக ஒட்டுமொத்த மக்களும் அங்கே சுங்கக் கட்டணம் கட்ட வேண்டிய சூழல் நிலவுகிற காரணத்தினால், இடங்களை மாற்ற வேண்டும் என்று கடிதங்கள் எழுதினோம். இப்படி தொடர்ந்து நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய உணர்வைப் புரிந்துகொண்டு, நம்முடைய மாநில அரசாங்கம், சுங்கக் கட்டணத்தை நீக்கிட வேண்டும், குறைத்திட வேண்டும் என்று தொடர்ந்து நாங்கள் குரல் கொடுக்கிறோம். தொடர்ந்து கடிதங்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறோம். நான் குறிப்பிட்டதைப்போல, கடைசியாக 18-3-2023 அன்று நாங்கள் கடிதம் அனுப்பினோம். ஆனால், திரும்பத் திரும்ப அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், ஏற்கெனவே நாங்கள் Act-ன்கீழ் ஒப்பந்தம் போட்டிருக்கிறோம், விதிகளுக்குட்பட்டுத்தான் போட்டிருக்கிறோம், கட்டுமானப் பணிகளுக்கான முழு செலவினங்களும் நிறைவடைந்த பிறகுதான் நாங்கள் முடிவு எடுக்க முடியும் என்று சொன்னார்கள்.

Toll-க்குட்பட்டு இனிமேல் சுங்கக் கட்டணம் வசூல் செய்ய மாட்டோம்; App மூலம் ஒருவர் 60 கிலோ மீட்டர் பயணம் செய்தால், 70 கிலோ மீட்டர் பயணம் செய்தால், அதற்குரிய கட்டணத்தை மட்டும் நாங்கள் வசூல் செய்வோம் என்று இப்போது ஒன்றிய அரசின் மாண்புமிகு அமைச்சர் திரு. நிதின் கட்கரி நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டிருக்கிறார். எனவே, இந்த அரசைப் பொறுத்தளவிற்கு இந்தக் கட்டண வசூல், toll gate எல்லாம் முழுமையாக எடுக்கப்பட வேண்டும் என்பதும் அல்லது ஏற்கெனவே maintenance என்ற பெயரில்கூட அதனைச் செய்ய வேண்டும் என்று சொன்னால், 40 சதவிகிதத்திற்குக் குறைவாகத்தான் கட்டணம் வசூல் செய்ய வேண்டுமென்பதிலே இந்த அரசு உறுதியாக இருக்கிறது. தொடர்ந்து இந்தக் கட்டணக் குறைவுக்கு இந்த அரசு மேலும், மேலும் முயற்சி செய்யும்.